ரமண ஒளி

Ramana Oli

Tamil Qly. Journal





தமிழ் காலாண்டு இதழ்
Annual Sub. Rs.40

ஒளி (Volume) 3
கதிர் (Issue) 2

June 2019-Aug. 2019
ஜுன் 2019-ஆகஸ். 2019

ஞானோதய இதழ்

ஓம்
நமோ பகவதே ஸ்ரீரமணாய

ஒளி 3 கதிர் 2	# ரமண ஒளி	ஜூன் - 19 - ஆகஸ்ட் - 19

(ஆண்டுக்கு நான்கு முறை)

ஞானோதய இதழ்

என்போலும் தீனரை இன்புறக் காத்துநீ
எந்நாளும் வாழ்ந்தருள் அருணாசலா

உள்ளே

		பக்கம்
1.	அஷ்டாவக்ர ஸம்ஹிதை	1
2.	ஞானாசார விசார படலம்	3
3.	நிஸர்க்க தத்த மஹராஜுடன் - III	4
4.	ரமண தரிசனம்	5
5.	ரமண சந்நிதி	7
6.	ரமண அமுதம்	9
7.	ரமண வாசகம்	11
8.	ரமணர் உபதேசிக்கும் வாழ்க்கைநெறி	12
9.	கௌரி தவம் இருந்த இடம் எது?	13
10.	மருந்தில்லாத வைத்தியம்	14
11.	நினைப்பின் சுழலில்	15
12.	ஸ்ரீ ரமண பக்த விஜயம்	17
13.	நாராயண குரு	23

பதிப்பாளர் :
டாக்டர் E. **கொண்டல்ராஜ்** Ph.D., (செயலாளர், ரமணகேந்திரம்)
ஆசிரியர் : டாக்டர் **T.N. பிரணதார்த்திஹரன்** Ph.D.,

திரு. **N. ரமணன்** (தலைவர், ரமணகேந்திரம்)

ஆண்டு சந்தா ரூ.40/- கீழ்கண்ட விலாசத்திற்கு M.O. செய்யவும்

ரமண கேந்திரம்
21/11, சொக்கப்ப நாயக்கர் தெரு, மதுரை—625 001.
Phone : 2348157 (6.00 pm to 9.00 pm)

அஷ்டாவக்ர ஸம்ஹிதை

- ஹரன்

ஆத்மஞானம் என்பது மற்ற ஞானங்களிலிருந்து வேறுபட்டது. நமக்கு அந்நியமாக உள்ள பொருளைப் பற்றி அறிவது விஷயஞானம். பிறபொருளைப் பற்றிய அறிவு எண்ணங்களின் அடிப்படையில் அமைவதால் இதனை விஷய ஞானம் என்றும் அழைப்பர். நம்மைப் பற்றி அறிவது ஸ்வரூபஞானம் எனப்படும். நமக்கு வேறாக இருக்கும் ஒன்றை அறியலாம். ஆனால் நம்மை நாமே அறிவது எப்படி? நாமாக இருத்தலே நம்மை அறிதலாம். அதாவது எண்ணங்களாக இல்லாமல் உணர்வாக இருத்தலே தன்னைத் தான் அறிதலாம்.

"தானாய் இருத்தலே தன்னை அறிதலாம்
தான் இரண்டற்றதால் உந்தீபற
தன்மய நிட்டை ஈது உந்தீபற" (உபதேச உந்தியார், 26)

பகவான், 'இருக்கிறது,' 'உள்ளது' ஆகிய சொற்களால் ஆத்மாவைக் குறிக்கிறார். 'இருப்பு' என்பது சத்து. அதை உணரும் போது அது சித்து. அந்த அனுபவம் ஆனந்தம். எனவே சச்சிதானந்தமே அதன் இயல்பு. உண்மை, கடவுள், ஆத்மா ஆகியவை இந்த உள்ளதைக் குறிக்கும். "தானாய் இருத்தலே தன்னை அறிதலாம்," என்கிறார் பகவான். ஞானியர் (ஆத்ம ஞானியர்) ஆத்ம ஞானத்தோடு திருப்தி அடைபவர்கள். (இங்கு ஆத்மாவே ஞான சொரூபம் என்பது பொருள்).

தன்னை உணர்ந்தபின் உணர்வதற்கு வேறு ஏதும் இல்லை. எல்லாமாய் உள்ள நிலை, ஏதும் இல்லா நிலை அது. (உண்மையுமாய் இன்மையுமாய்). ஆத்மா மட்டுமே உண்டு; எனவே அது உண்மை. அகந்தை அற்ற நிலை அது; எனவே அது இன்மை. இவ்வாறு ஒரே நிலை இரண்டுமாய் விளங்குகிறது. தன்னை உணர்ந்தவர்கள் மகாத்மாக்கள் என்கிறார் அஷ்டாவக்ரர். (ஆத்மா மட்டுமே உண்டு, அகந்தை இல்லை - எனவே 'உண்மையுமாய் இன்மையுமாய்' என்ற தொடர் அமைகிறது. "நானுதியாது உள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை" என்கிறார் பகவான்).

தன்னை உணர்ந்தபின் ஒரு நிறைவு ஏற்படுகிறது. எதையும் அடைய வேண்டும் என்ற விருப்பம் இனியும் இல்லை. மனத்தைக் கடந்த நிலை அது. பின் ஏது விருப்பம்? முக்தி வேண்டும் என்ற விருப்பம் கூட இல்லாது போகிறது. பந்தம் இருந்தால்தானே முக்தி?

வீடும் வேண்டா நிலை அது. தன்னை உணர்தலே விடுதலை தானே. பின் இனியும் ஏன் விடுதலையை நாட வேண்டும்?

இத்தகைய மகாத்மாக்களுக்கு யாரை ஒப்புவமை கூறமுடியும்? அவர்கள் தன்னிகரற்றவர்கள். இருவர் இருந்தால் அல்லவோ ஒருவரை இன்னொருவருக்கு உவமை சொல்ல முடியும்? இருப்பது ஒன்று தானே.

"அல்லும் பகலும் அறிவாகி நின்றவர்க்கே ஒப்புவமை
சொல்லவும் வாயுண்டோ பராபரமே,"

என்று கேட்கிறார் தாயுமானவர்.

ஆகவே ஆத்மஞானத்தால் திருப்தி அடைந்து, வேறு எதையும் விரும்பாது, முக்தியைக் கூட நாடாது, தன்னிலே தான் உறையும் மகாத்மாக்களுக்கு யாரை உவமை சொல்ல முடியும் என்று கேட்கிறார் அஷ்டாவக்ரர்.

தன்னை உணர்தலே முக்தி என்பது கருத்து.

"நிஸ்ப்ருஹம் மானஸம் யஸ்ய நைராஸ்யேऽபி மஹாத்மந: |
தஸ்ய ஆத்மஞான த்ருப்தஸ்ய துலநா கேந ஜாயதே ||

ஆத்ம ஞானம் முக்தியைத் தருவதால் அதுவே திருப்தியை அளிக்கும் என்பது இச்சுலோகம் தரும் செய்தி. முக்தியால் மட்டுமே திருப்தி கிட்டும் என்பது உட்கிடை.

✿ ✿ ✿

கேந்திர நிகழ்ச்சிகள்

2.5.19 வியாழன்

பகவானின் 69ஆவது ஆராதனை விழா ஸ்ரீரமண மந்திரத்தில் காலை 7.30 மணி முதல் 12 மணி வரை 10 வேத விற்பனர்களால் வேத பாராயணம், பகவான் பாதுகைக்கு அபிஷேக, ஆராதனை நடைபெற்றது. ஸஹஸ்ர நாமம், அஷ்டோத்திரம், அக்ஷரமணமாலை பாராயணம் சுமார் 100 அன்பர்களால் நடைபெற்றது. பின்னர் சுமார் 600 அன்பர்கள் அன்னதானத்தில் கலந்து கொண்டனர்.

மாலை 7 முதல் 8.15 வரை திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ணதபோவனம் செயலர் **ஸ்ரீமத் சுவாமி ஸத்யானந்த** அவர்கள் பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகள் அருளிய **"பகவத் கீதாசாரம்"** எனும் தலைப்பில் மிக எளிய முறையில் விளக்கி கூறினார். பின்னர் அக்ஷரமணமாலை பாராயணம் நடைபெற்றது. 8.40 முதல் 8.50 வரை தியானத்துடன் நிறைவு செய்யப்பட்டது.

ஸ்ரீ தேவி காலோத்தர ஞானாசார விசாரப் படலம்

- ஹரன்

எல்லோர்க்கும் முக்தி தரும் மார்க்கம் பற்றி அம்பிகை வினவ, ஈசன் பின்வருமாறு பதிலளிக்கிறார்; "மாதரசே! ஞானியர் எம்மார்க்கத்தால் குற்றமிலா முக்தியினை அடைவரோ, அந்த மார்க்கத்தின் ஒழுக்கம் பற்றி இன்று நான் உனக்கு உரைக்கிறேன். இது ஞான மார்க்கம். இதனால் எல்லோரும் ஞானம் பெறுவர்"

"யாதினால் ஞானியர்கள் யாதோர் களங்கமும் இல்
ஓதரிய முத்திதனை உற்றிடுவார் - மாதரசே!
ஞான ஆசாரங்கள் நான் உனக்கு இன்று (உ)ரைப்பன்
ஞானம்உற யாவருமே நன்கு" (2)

விளக்கம்

வாழ்வின் நோக்கம் விடுதலை பெறுவதே. விடுதலையை முத்தி என்பர். அதனை விளக்குதல் கடினம். எனவே 'ஓதரிய முத்தி' என்றார். ஒவ்வொரு மார்க்கத்திற்கும் கருத்து, பயிற்சி என இரண்டு உண்டு (கருத்து - theory) (பயிற்சி - application). அவ்வாறே இம்மார்க்கத்திற்கும் இவை இரண்டும் உண்டு. கருத்தினை 'ஞானம்' என்றும் பயிற்சியை 'ஆசாரம்' என்றும் இந்நூல் கூறுகிறது.

இம்மார்க்கம் எல்லோர்க்கும் பொது. இதனை "யாவருமே ஞானம் உற" என்ற தொடர் விளக்கும். 'இன்று உரைப்பன்' என்பதற்கு, "நான் விளக்கமாகக் கூறுகிறேன்," என்பது பொருள். குறை ஏதும் இல்லாதது முத்தி. எனவே, "யாதோர் களங்கமும் இல் முத்தி," என்றார்.

ஞானியர் ஞான மார்க்கத்தால் முத்தி அடைவர், ஞானம் வினையை நீக்கும். அதனால் முத்தி கிட்டும். முத்தி என்பது விடுதலைப்பட்ட நிலை. (முத்தி என்றோர் நிலை சமைத்தாய்). பந்தங்கள் யாவும் கழலும் நிலை முத்தி. அதுமட்டுமே நித்தியம். "நித்தமாம் முத்தி நிலை," என்று பகவான் கூறுவர். அந்நிலையில் "நான் செய்கிறேன்," என்ற எண்ணம் இல்லை. மூவகை வினைகளும் கழன்று போகும். ஆகவே கர்த்தா, கன்மம் ஆகிய இரண்டும் அற்றது முத்தி நிலை. கர்த்தா இருக்கும் வரையில் கன்மம் உண்டு. கர்த்தா என்பது நீங்கினால் கன்மமும் நீங்கும்.

"பர்த்தா போய்க் கைம்மையுறாப் பத்தினி எஞ்சாததுபோல்
கர்த்தா போல் மூவினையும் போம்"

என்கிறது உள்ளது நாற்பது. (தொடரும்)

✿✿✿

நிஸர்க தத்த மகராஜுடன் -III

- வே. கணேசன்

அணுக்குண்டு பதில்

ஆன்மிக கேள்விகளுக்கு நிஸர்கதத்த மகராஜ் பதிலளிப்பது என்பது வழக்கமான சாஸ்திர வாக்கியம் போல் இருக்காது. அவரது அனுபவத்தை விளக்குவதாகவும் அமையாது. அவை ஆன்மிக சக்தி நிறைந்த வெளிப்பாடுகள். கேட்பவரை அவை உடனே நிகழ்கால அனுபவத்திற்கு அழைத்துச் செல்லும். எடுத்துக்காட்டாக, விழிப்புணர்விற்கும் உணர்விற்கும் இடையே உள்ள, வேறுபாடு எது என்று கேட்டால், “ஒரு பொருளை விழிப்புணர்வு பற்றும் போது, அது உணர்வாகிறது,” என்பது அவரது பதிலாக அமையும். அத்தகைய பதில்களை நான் ‘அணுக்குண்டு பதில்’ என்பேன். அதைக் கேட்டதும் கட்டுப்பட்ட உணர்விலிருந்து விடுபட்டு, கட்டுபடாத நிகழ்கால உணர்விற்கு நாம் செலுத்தப்படுவோம்.

✿✿✿

முதல் சந்திப்பிலேயே எனக்கும் அவருக்கும் இடையே உள்ள உறவினை அவர் வெளிப்படுத்தினார். ஒருநாள் அறியாமை காரணமாக நான் எல்லை கடந்த போது, அதை எதிர் கொள்வதில் அவர் எவ்வாறு உயர்ந்திருக்கிறார் என்பதை நிரூபித்தார்.

அது அவரது பிறந்தநாள். அவரிடம் கொண்ட பக்தியின் காரணமாக, ஒரு தட்டில் பழம், பூ, மாலை, புதுத்துணி ஆகியவற்றோடு ஒரு கவரில் 51 ரூபாயும் வைத்து, அவர்முன் நமஸ்கரித்தேன். கண்ணீர் பெருக நீண்ட நேரம் அவ்வாறே இருந்தேன். என் தலைமீது தன் கையை வைத்து அன்புடன் என்னை எழுந்திருக்கச் சொன்னார் அவர். என் காணிக்கைகளை அவர் ஏற்றார். திடீரென்று தன் கைகளைத் தட்டினார். உடனே அவரது மருமகள் வந்தாள். அவளிடம் அவர் மராத்தியில் ஏதோ சொன்னார். சிறிது நேரம் கழித்து ஒரு கவரைக் கொண்டுவந்து அவரிடம் கொடுத்தாள் அவள். தொடர்ந்து என்னை ஆசீர்வதித்து நான் விடைபெறவும் அவர் அனுமதி அளித்தார். நான் கிளம்பும் போது, அந்தக் கவரை என்னிடம் கொடுத்து, “பாட்டனார் தான் பேரனுக்கு வெகுமதி அளிக்க வேண்டும் என்று முதல் நாளே உன்னிடம் சொல்லி இருக்கிறேன். வீட்டிற்குச் சென்ற பின் கவரைத் திறந்துபார், அதற்கு முன் அன்று,” என்றார். அவர் கூறியவாறே வீட்டிற்குச் சென்று கவரைத் திறந்து பார்த்தேன். அதில் 51ரூபாய் இருந்தது !

✿✿✿

இரண்டு வருடம் கழித்து என் தம்பியை அவன் குடும்பத்தோடு அவரிடம் அழைத்துச் சென்றேன். பல பொருள்களைத் தட்டில் வைத்து அவற்றோடு ஒரு கவரில் 101 ரூபாய் பணமும் சேர்த்துக் கொடுத்தான். பதிலுக்கு ஒரு கவரை மகராஜ் அவனிடம் கொடுத்து, வீட்டிற்குச் சென்ற பின்னரே அதைத் திறந்து பார்க்குமாறு அவர் கூறினார். எனக்குச் செய்தது போலவே அவனது கவரையும் அவர் திறந்து பார்க்கவில்லை. வீட்டிற்கு வந்தது என் தம்பி அக்கவரைத் திறந்து பார்க்க, அதில்101 ரூபாய் இருந்தது. பேரரர்கள் அவர் சொற்படி கேட்காமல் பிழை செய்து விட்டனர். ஆனால் புகழ்மிக்க பாட்டனார் அவர்கள் தவறுகளைத் தனது அருளால் சரிசெய்து விட்டார். இவைதாம் அதிசயங்கள் எனப்படுகின்றன !

✿ ✿ ✿

ரமண தரிசனம்

- ஹரன்

நம்முள் ஒளிர்வது எது?

தேவராஜ முதலியார் பகவானிடம், ''சுவாமி! நம்முள்ளே ஒளிர்வது, ஸ்புரிப்பது எது? ஆன்ம சொரூபமா? அல்லது "நான்" என்ற எண்ணமா (அகந்தை)?

பகவான் : இவை இரண்டும் அல்ல. இவை இரண்டிற்கும் இடைப்பட்டது ஸ்புரிப்பு (விளங்குவது) என்று கூறலாம். அதை ஸ்புரிப்பும், அகந்தையும் சேர்ந்த ஒன்று என்றும் கூறலாம். தன் சொரூபம் ஸ்புரிப்பும் அற்றது.

இதனை விளக்கும்போது பகவான் கூறினார்: ''மனிதனுக்கு மூன்று உடல்கள் உள்ளன. அவை ஸ்தூல, சூக்ஷ்ம, ஜீவ (காரண) சரீரம் எனப்படும். ஸ்தூல சரீரம் பஞ்சபூதங்களால் ஆனது. சூக்ஷ்ம சரீரம் மனம், பிராணன் ஆகியவற்றால் ஆனது. மூன்றாவது ஜீவன். இதைப்போன்றே ஈஸ்வரனுக்கும் மூன்று உடம்புகள் உள்ளன. அண்ட சராசரமும் அவனது ஸ்தூல உடம்பு. ஒளியும் ஒலியும் அவனது சூக்ஷ்ம உடம்பு. ஆன்மாவே அவனது ஜீவன்."

இவை எல்லாம் கடந்தது பிரம்மம். அது குணம், குறி அற்றது.

நாலில் ஒரு பாகம்

ஒரு நாள் யோகி ராமையா பகவான் சன்னிதானத்திற்கு வந்தார். அவர் கையில் சிறிய நோட்டுப் புத்தகம். அதில் பல நாட்களுக்கு முன் பகவான் தம் கைப்பட எழுதிய சில பாடல்கள் இருந்தன. அந்த நோட்டுப் புத்தகத்தைச் சரியாக பைண்டு செய்தால் நலம் என எண்ணினார்.

பகவான் உடனே அந்த நோட்டுப் புத்தகத்தை வாங்கி T.S. ராஜ கோபால் என்ற அன்பரிடம் கொடுத்து பைண்டு செய்து கொண்டு வரச்

சொன்னார். அன்று மாலையில் அது அழகாக பைண்டு செய்யப்பட்டு பகவானிடம் கொடுக்கப்பட்டது. அதைப் பாராட்டினார் பகவான். யோகி ராமையாவிடம் கொடுத்து, "இப்போது பாரும், உம்முடைய நோட்டுப் புத்தகத்தை ! " என்றார். அதைப் பெற்றுக் கொண்டு, "எல்லாம் பகவானது கருணை," என்றார் யோகி ராமையா.

அதை வாங்கிப் புரட்டிப் பார்த்த முருகனார், அதில் கால் பாகம் மட்டுமே எழுதப்பட்டு, மீதி முக்கால் பாகம் எழுதப்படாமல் இருப்பதைக் கவனித்தார். உடனே புருஷ சூக்தத்திலிருந்து சில வரிகளை மேற் கோளாகச் சொன்னார்.

ஏதாவானஸ்ய மஹிமா | அதோ ஜாயாம்ஸ்ச
பூருஷ: | பாதோऽஸ்ய விஸ்வா பூதானி |
த்ரிபாதஸ்யா ऽம்ருதம் திவி || (*யஜுர்வேதம்-புருஷஸூக்தம்*)

பொருள் : "பிரபஞ்சத்தின் படைப்பு கடவுளின் மகிமையில் கால்பாகமே வியாபித்து, மீதி முக்கால் பாகம் அதற்கு அப்பால் வியாபித்து இருக்கிறது."

"அதுபோல இந்த நோட்டுப் புத்தகத்தில் உள்ள செய்தி பகவானின் மகிமையில் கால்பாகத்தையே வருணித்திருக்கிறது ! "

பகவான் உட்பட ஹாலில் உள்ள அனைவரும் இந்த நகைச் சுவையைப் பெரிதும் ரசித்துச் சிரித்தனர்.

இன்னும் இரண்டு "நான்" இருக்கா?

ஹரிபாய் அதல்ஜா சுவாமி மாதவதீர்த்தரின் பக்தர். 1946-ல் பகவானைத் தரிசிக்க திருவண்ணாமலை வந்தார். பழைய ஹாலுக்கு வந்து பகவான் முன் அமர்ந்து, ஒரு துண்டு சீட்டைப் பகவானிடம் கொடுத்தார். அதில், "நான் ஆத்மானுபவம் பெற்றுவிட்டதாக உணர்கி றேன். ஆனால் என் மனம் அதை ஒப்புக்கொள்ள மறுக்கிறது, சந்தேகப் படுகிறது. தாங்களே எனக்கு உதவ வேண்டும்," என்று எழுதியிருந்தார்.

பகவான் அதைப் படித்துவிட்டு உள்ளது நாற்பது 33-ம் பாடலை அவருக்குப் படித்துக் காட்டச் சொன்னார், அதன் பொருள் அவருக்குப் படித்துக் காட்டப்பட்டது. பகவான் அவரிடம், "நான் என்பதை யாரும் உணர முடியாது. இங்கே 'நான்' என்பதை உணராமல் யாரும் கிடையாது. இங்கு இரண்டு 'நான்' இருக்கா, ஒன்று இன்னொன்றை உணர?" என்றார்.

ஒரு வருடம் கழித்து ஹரிபாய் மீண்டும் வந்தார். இம்முறை எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. மாலையில் மலைக்குச் சென்றார். கீழே இறங்கி வரும்போது, பகவான் வழக்கமான பாதையில் மலை மீது ஏறிக் கொண்டிருந்தார். பகவான் செல்ல வழிவிட்டு ஹரிபாய் பவ்யமாக ஒதுங்கி நின்றார். அவர் அருகில் வந்த பகவான், "இன்னும் இரண்டு 'நான்' இருக்கா?" என்று கேட்டபடி அவரைக் கடந்து சென்றார். ✿ ✿ ✿

ரமண சந்நிதி

- ஹரன்

பிரசாதம்

சாப்பாட்டு அறையில் பகவான் சாப்பிடத் தொடங்குமுன் ஓர் அன்பர் அவர் அருகில் சென்று, "சிறிது பிரசாதம் கொடுத்தருள வேண்டும்," என்று வேண்டினார். பகவான், "சாப்பிடுகிறவன் 'நான்' என்ற எண்ணமின்றிச் சாப்பிட்டால், அதுவே பிரசாதம் ஆகும்,"என்றார்.

சாப்பாடு முடிந்தபின்.... "உங்களுக்கு நான் பிரசாதம் கொடுத்தால், ஒவ்வொருவரும் அவ்வாறே கேட்பர். எல்லோருக்கும் பிரசாதம் கொடுத்த பிறகு என் இலையில் என்ன மிச்சம் இருக்கும்? என் இலையிலிருந்து ஒரு கவளம் வாங்கி உண்பதில் என்ன விசேஷம் இருக்கிறது? அதுவா பக்தி? உள்ளே அன்பிருந்தால் அதுவே போதும்," என்றார் பகவான்.

ஞானியின் மனம்

ஒரு நாள் ஓர் அன்பர் பகவானைக் கேட்டார், "சுவாமி! ஞானிகளுக்கு மனம் என்பது உண்டா அல்லது இல்லையா?"

பகவான் கருணையோடு, " மனம் என்று ஒன்று இல்லாமல் ஒருவன் பிரம்மத்தை அறியமுடியாது. மனம் ஏதாவது ஒன்றைப் பற்றிக் கொண்டுதான் செயல்பட முடியும். இந்த உபாதி சம்பந்தம் ஏற்படும் போதுதான் நாம் ஒருவரை ஞானி என்று கூறுகிறோம். மனம் என்று ஒன்றில்லாமல் உபாதி மட்டும் எப்படிச் செயல்படமுடியும்? அது இயலாது. ஆகையால்தான் ஞானியின் மனம் பிரம்மமே என்று கூறப்படுகிறது.

ஞானி எப்பொழுதும் பிரம்மத்தைக் காண்கிறான். மனம் என்ற ஒன்று இல்லையானால் பிரம்மத்தைக் காண்பது எப்படி? எனவேதான் ஞானியின் மனத்தை 'பிரம்மாகாரம்' என்றும், 'அகண்டாகாரம்' என்றும் கூறுவர். உண்மையில் ஞானியின் மனம் பிரம்மமே ஆகும்.

விசிறியது யார்?

மார்ச் மாத இறுதி. கோடையின் வெப்பம் அதிகமாய் இருந்தது. இரவு உணவுக்குப் பின் பகவான் பழைய ஹாலுக்கு வெளியில் உள்ள இடத்தில் அடியார்கள் சூழ, கட்டிலின் மீது சாய்ந்து உட்கார்ந்திருந்தார்.

அப்போது இந்த வேடிக்கைச் சம்பவம் நடந்தது---

பகவானுக்குப் பின்புறம் அமர்ந்திருந்த சாட்விக், பகவானுக்குத் தெரியாமல் விசிறிகொண்டு விசிறினார். சில்லென்ற காற்று தன் மேலே படவே, பகவான் திரும்பிப் பார்த்தார். சாட்விக் உடனே சட்டென விசிறுவதை நிறுத்தி, ஏதுமறியாதவர் போல் இருந்தார். பகவான்

முன்புறம் திரும்பியதும் மறுபடியும் சாட்விக் விசிற ஆரம்பித்தார். மறுபடியும் பகவான் திரும்பவே, விசிறுவதை நிறுத்தினார் சாட்விக். எப்படி காற்று வீசுகிறது எனப் பகவான் அதிசயிக்க, சாட்விக் கலகல எனச் சிரிக்கவே, விஷயத்தைப் புரிந்து கொண்ட பகவானும் அச்சிரிப்பில் கலந்து கொண்டார். ஞானியின் சகஜமான, குழந்தை சுபாவம் இங்கு வெளிப்படுகிறது.

கொசுவும் குதிரையும்

ஒரு நாள் தரிசன ஹாலுக்குப் பகவானது பக்தர் ஒருவர் வந்தார். அவரைக் கண்டதும் பகவான், ஹாலில் உட்கார்ந்திருந்த பருத்த உடலுடைய ஓர் அடியாரைக் காட்டி, 'இதோ பாருங்கோ கொசு,' என்றார். பருத்த உடம்பை உடைய அவரைக் கண்டு 'இவரைக் கொசு என்கிறாரே பகவான்' என்று அதிசயப்பட்டார் அந்த பக்தர்.

இதை அடுத்து, அவர் அருகில் இருந்த மெலிந்த உடலை உடைய ஓர் அடியவரைக் காட்டி, "இதோ பாருங்கோ, குதிரை," என்றார். அந்த அடியவர் கோட்டும் பேண்ட்டும் அணிந்து ஒரு கனவானாகக் காணப்பட்டார். "இவரையா குதிரை என்கிறார் பகவான் !" என்று வியந்தார் அந்த பக்தர். ஹாலில் அமர்ந்திருந்த அன்பர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

அப்போது சிரித்துக் கொண்டே அவர்கள் இருவரையும் சுட்டிக் காட்டி, "**இவர் கொசு, இவர் குதிரை**" என்று கூறிய பகவான், அவ்விரு வரின் குடும்பப் பெயரையும் சேர்த்து எல்லோருக்கும் அறிமுகப் படுத்தினார்.

"இவர் தோமா வேங்கடஸ்வாமி குப்தாகாரு, இவர் குர்ரம் வேங்கட சுப்பராமையாகாரு,"

"தெலுங்கில் **தோம** என்றால் **கொசு** என்றும், **குர்ரம்** என்றால் **குதிரை** என்றும் பொருள்."

-இவ்வாறு பகவான் விளக்கியதும், ஹாலில் சிரிப்பு அலை மோதியது.

✿ ✿ ✿

	புனர்வசு	பௌர்ணமி
ஜூலை	03.07.19 - புதன்	16.07.19 - செவ்வாய்
	30.07.19 - செவ்வாய்	
ஆகஸ்டு	27.08.19 - செவ்வாய்	14.08.19 - புதன்
செப்டம்பர்	23.09.19 - திங்கள்	13.09.19 - வெள்ளி

ரமண அமுதம்

- ஹரன்

அணுகுண்டு

ஒரு நாள் அடியார்களிடம் உரையாடும்போது, பகவான் ஞானத்தைப் பற்றியும், பக்தியைப் பற்றியும் பின்வருமாறு விளக்கினார்.

1. ஞானம் என்ற சுடர், அண்ட சராசரங்களையும், மலையளவு பஞ்சுப் பொதியைப் பொசுக்குவது போலப் பொசுக்கி எரித்துவிடும்.
2. உலகங்கள் எல்லாம், வலிமையற்ற அகம்விருத்தி (ego) என்ற அஸ்திவாரத்தை ஆதாரமாகக் கொண்டிருப்பதால், அவை யாவும் ஞானம் என்கிற **அணுகுண்டு** வந்து தாக்கும்போது, இடிந்து சரிந்து விழுந்துவிடும்.
3. சரணாகதி என்பது வெல்லப் பிள்ளையாரைக் கிள்ளி அதனை அவருக்கே நிவேதனம் செய்வது போலாகும். நீ உனது உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தையும் கடவுளுக்கே அர்ப்பணிப்பதாய்க் கூறுகிறாய். அர்ப்பணம் செய்ய இவையெல்லாம் உனக்குச் சொந்தமாக இருந்தனவா? நீ இப்படிச் சொன்னால் அது சரியாக இருக்கும் - "பகவானே ! நான் அஞ்ஞானத்தால் இவை எல்லாம் என்னுடையவை என்று நினைத்திருந்தேன். இவை யாவும் உன்னுடைமையே என்பதை நான் இப்போது அறிகிறேன். இனிமேல் இவற்றை எல்லாம் என்னுடைமைகளாக நான் நினைக்க மாட்டேன்."
4. உள்ள பொருள் ஒன்று. அது ஆன்ம சொரூபமே. யான், எனது என்பதெல்லாம் அறியாமை என்று உணர்வதே ஞானம் ஆகும்.

சுத்த மனம் [அரூப மனம்]

ராய் என்ற அன்பர், "சுவாமி ! 'நான்' என்ற அகந்தையை எப்படிக் கொல்வது? அதற்கு ஏற்ற வழி என்ன?" என்று பகவானைக் கேட்டார்.

பகவான், "மனதை அழிக்குமாறு அதைக் கேட்க முடியாது. அப்படிச் செய்வது திருடனையே போலீஸ் ஆக்குவது போலாம். அவன் உன்னுடன் வந்து திருடனைப் பிடித்துத் தருகிறேன் என்று பாசாங்கு செய்வான். அதனால் ஒரு பயனும் இல்லை."

"ஆகையால் நீ உனது நாட்டத்தை உன்முகமாக்க வேண்டும். 'நான்' என்ற எண்ணம் எங்கிருந்து உதிக்கிறது என்று உன்முகமாக ஆராய்ந்தால், மனம் என ஒன்று இல்லை என்பதை அறிவாய்."

"என்றாலும் மனத்தின் உதவி கொண்டே அதனை அழிக்க வேண்டியிருக்கிறது. ஆனால், 'அதனை நான் அழிப்பேன்' என்று சொல்வதால் பயனில்லை. மனம் எங்கிருந்து எழுகின்றது என்று அதன் மூலத்தைத் தேட வேண்டும்."

"மனம் வெளிக்கிளம்பும்போது எண்ணங்களும் பொருள்களும் உதிக்கின்றன. மனம் உள்முகப்படும்போது அதுவே ஆன்ம சொரூப மாய் பிரகாசிக்கிறது. இப்படி உள்முகமான மனம் **அரூப மனம்** என்றும், **சுத்த மனம்** என்றும் அழைக்கப்படுகிறது" என்றார்.

சிரத்தைக்கு ஏற்பப் பலன்

கிராண்ட் டஃப் (Grant Duff) என்ற ஆங்கிலேயருக்கு எழுபது வயதுக்கு மேல் இருக்கும். பகவான் அவரிடம் பரிவும் அன்பும் காட்டி னார். இதைக் கண்ட நம் நாட்டு அன்பர் ஒருவர், "பகவான் வெளி நாட்டவரிடம் தனியன்பு காட்டுகிறார், ஆனால் நமக்கோ ஒன்றும் புரிவதில்லை," என்றார் நகைச்சுவையோடு.

பகவான் பரிவுடன் கூறினார், "பாருங்கள். அவரது வயதென்ன? நிலைமை என்ன? முதிய வயதில் ஆயிரக்கணக்கான மைல் தூரத்தைக் கடந்து, ஒன்றுமில்லாத ஒரு கோவணாண்டியை நாடிவந்து பணிந்து நிற்கிறார். எனவே உண்மையை உணரும் ஆர்வமும், பக்தி சிரத்தை யும் இவரிடம் எவ்வளவு தீவிரமாக இருக்க வேண்டும் !"

எனவே நம் சிரத்தைக்கு ஏற்பப் பயன் கிடைக்கிறது.

கற்பனையும் காட்சியும்

ஒரு நாள் ஓரன்பர், "சுவாமி ! கற்பனைக்கும் காட்சிக்கும் இடையே என்ன வேறுபாடு?" என்று பகவானைக் கேட்டார்.

பகவான் கூறினார்: "கற்பனை என்பது நாம் விரும்பி மனதால் செய்யும் செயல். காட்சி என்பது நமது விருப்பம் இன்றியே தானாகத் தோன்றும் ஓர் உருவெளித் தோற்றம் எனலாம்.

என்றாலும் நன்றாக ஆராய்ந்து பார்த்தால், நமக்கு ஏற்படும் காட்சிகளும் இப்போது இல்லாவிட்டாலும், முன்பொரு காலத்தில் ஏற்பட்ட மனோமயமான செயல்களே. ஒருவர் ஞானநிலையை எய்தும்போது - தூக்கம், கனவு, விழிப்பு, காட்சி ஆகிய எல்லாமே உண்மையானவை அல்ல, ஆன்ம சொரூபம் ஒன்றே உண்மையானது என்பதை அறியலாம்."

✿ ✿ ✿

பக்தர்கள் இல்லங்களில் சத்சங்கம்

22.04.2019 - திங்கள் - திரு. ரெங்கசாமி - கலாராணி

S.S. காலனி இல்லம்.

காலை 8.00 மணி முதல் 9.30 வரை சத்சங்கம் நடைபெற்றது. அன்பர்கள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் பிரசாதமாக காலை உணவு வழங்கப்பட்டது.

ரமண வாசகம்

- ஹரன்

நான் யார்?

பி.வி. நரசிம்ம சுவாமி பகவானிடம், "நான் யார்? அதை எப்படி கண்டுபிடிக்கிறது?" என்று கேட்டார்.

பகவான் அதற்குப் பின்வருமாறு பதில் கூறினார்:

முதலில் இந்தக் கேள்வியை உங்களுக்குள்ளேயே நல்லாக் கேளுங்கோ. உடம்பும், அதன் செயல்களும் 'நான்' இல்லே. இன்னும் ஆழ்ந்து பார்த்தா, மனசும், அதன் செயல்களும் 'நான்' இல்லே.

அடுத்த கேள்விக்குப் போவோம். இந்த நினைப்பெல்லாம் எங்கிருந்து வரது? சிலது அதுவா வரது. சிலது மேலோட்டமா இருக்கு. சிலது ஆராய்ச்சியா இருக்கு. இதெல்லாம் புத்திக்குத்தான் புலப்படறது.

நினைப்பு வரதும், அதன் செயல்பாடுகளும், அதோட செய்திகளும் யாரோ ஒருத்தனுக்குத்தான் ஏற்படறது. ஒரு தனிப்பாங்குதான் (individual) இந்த நினைப்புக்கெல்லாம் காரண கர்த்தாவாக இருக்கு.

இந்த நினைப்பாலே அவதிப்படறதும்..... அந்த தனிப்பாங்குதான். இதைத்தான் அகந்தை, போலி நான் என எல்லாரும் சொல்றா.

விஞ்ஞானமய கோசத்திலேதான் இந்த 'நான்' இருக்கு. ஆனா இந்த விஞ்ஞானம் 'நான்' கிடையாது. இதை மேலும் விசாரிச்சா, இந்தத் 'தனி நான்' எங்கிருந்து வந்தது? நான் யார்? இந்தத் 'தனிநான்' யார்?

தூக்கத்தில் இந்த தனித்தன்மையைக் காணோம். உணர முடியலே. இது கிளம்பின உடனேயே... தூக்கம் - விழிப்பாகவோ கனவாகவோ மாறிடறது. கனவைப் பத்தி இப்போ கவலை இல்லை.

இந்த விழிப்பிலே நான் யார்? நான் தூக்கத்திலே இருந்துதான் வந்தேன்னு சொன்னா.... நான் ஓர் அறியாமைங்கற இருட்டுக்குள்ளேயிருந்து வந்தேன்னு சொல்லணும்.

இப்படி இருட்டா இருக்கறதையா... நம் மூலமா சாஸ்திரங்களும் பெரியவாளும் பூரணப்பொருள்னு சொல்றா? இருக்க முடியாது. அப்போ 'நான்' கறது தூக்கமும் கடந்த பொருளாய் இருக்கணும். அது எப்பவும் இருக்கணும். இங்கேயே .... இப்போவே.... இருக்கணும். ஆக 'நான்'கறதுதான் எல்லாத்துக்கும் ஆதாரம். அதாவது இந்த மூணு நிலைக்கும் ஆதாரம்.

சுருக்கமா, 'நான்'கறது பஞ்ச கோசங்களுக்கு அப்பாலே இருக்கறது. எல்லாத்தையும் அனாத்மான்னு தள்ளினது போக மிஞ்சறது ஆத்மா.

ஆத்மாவை உணர்வது எப்படி?

முதலில் இப்போ இருக்கற பார்வை மாறணும். தனியான ஜீவன் தனக்கு அன்னியமா ஓர் உலகத்தை அறியறான். அதாவது ..... காண்பான் காட்சின்னு இரண்டா இருக்கு. இந்தக் காண்பானுக்கும்... காட்சிக்கும் இடையே ஏதோ ஒரு சம்பந்தம் இருக்கு. இதுதான் அகந்தையா எழுந்து சம்பந்தத்தை உண்டு பண்றது. இந்த அகந்தை உண்மையிலேயே சித்து (அறிவு) தான். சித் அல்லாதது ஜடம்.

இந்தக் காண்பான்-காட்சி இரண்டுலே....காண்பான் பக்கம்தான் 'சித்' இருக்கு. இந்தக் காண்பான் யார்ன்னு தேடினா.... காட்சி மறைஞ்சுடும். காண்பவன் சூட்சுமமும் அதிசூட்சுமமும் ஆகிக் கொண்டே போய், உண்மையான காண்பான் மாத்திரமே மிஞ்சும். இதுக்குப் பெயர் 'திருஷ்டி விலயம்'. அதாவது காட்சி இல்லாம போறது.

✿ ✿ ✿

ரமணர் உபதேசிக்கும் வாழ்க்கை நெறி

- ஹரன்

குருவே பிரமனும் யமனும்

ஒரு நாள் பகவான் கூறினார்: "கர்மாக்கள் இயற்றிக் கொண்டே இருந்தால் மோக்ஷம் பெறுவது எப்படி? கர்மமானது பந்தத்திற்குக் காரணம் ஆகிறது."

"ஆகையால் மோக்ஷம் வேண்டும், ஞானம் வேண்டும் என்ற தீவிர ஆசையுள்ள முமுக்ஷுக்களுக்கு - யாகம் செய், ஹோமம் செய், தேவதைகளைத் திருப்திப்படுத்த இன்னின்ன விரதங்களை மேற்கொள் - என்று கூறும் குருவே அந்த முமுக்ஷுவுக்குப் பிரமனும் யமனும் ஆகிறான்"

"ஒழிவில் ஒடுக்கம்" என்ற நூலில் ஒரு பாடல் இக்கருத்தையே கூறுகிறது.

"கிரியைக் நினைத்துவந்து கேட்டவர்க்குச் சும்மா
திரியச் சுகம் விளைவித்த சீமான் - குருவன்றிச்
சற்றே பதைப்புத் தரினும் சுகம் படைக்கக்
கற்றானும் காலனுமாம் காண்."

சீடனை மென்மேலும் கர்மாக்களைச் செய்யச் சொல்லி அவன் பிறவி எடுக்கக் காரணம் ஆவதால், அந்த குரு 'பிரம்மா' எனவும், சீடன் மீண்டும் பிறந்து இறப்பதற்கும் அவரே காரணம் ஆவதால், அவரே, 'யமன்', என்றும் கூறப்படுகிறார்.

'கர்மமே பந்தம்; கர்ம நாசமே மோக்ஷம்' என்பது இங்கு பகவான் தரும் உபதேசம். கர்மம் அகர்மமாக வேண்டும் என்பது குறிப்பு.

ரமண வழி

சுப்பராவ் என்ற பக்தர், "சுவாமி நான் சமாதியில் ஆழ்வது சாத்தியமா?" என்று கேட்டார். "ஏன், சமாதிநிலை இப்போது இல்லையா?" என்று கேட்டார் பகவான்.

"அப்படியானால் சமாதிநிலை என்பது எப்போதும் இருப்பதா?" என்றார் சுப்பராவ். "சமாதிநிலை எப்போதும் இல்லாவிடில் அது எப்படி உண்மை ஆகும்?" என்று பதிலளித்தார் பகவான்.

'அப்புறம்?' என இழுத்தார் சுப்பராவ். "அப்புறமும் இல்லை, இப்புறமும் இல்லை" என்றார் பகவான்.

"பகவான் சொல்வது சரி என்றே தோன்றுகிறது" என்றார் சுப்பராவ். "யாருக்கு?" என வினவினார் பகவான். "என் மனத்திற்கு," எனப் பதிலளித்தார் சுப்பராவ்.

"மனம் என்பது என்ன? 'என் மனம்' என்கிறவன் யார்?-" மடக்கினார் பகவான். மௌனமானார் சுப்பராவ்.

எவ்வித கேள்வியைக் கேட்டாலும், எப்படிக் கேட்டாலும் அந்த பக்தரை மடக்கி, உள்ளே பிடித்துத் தள்ளி - "திரும்பி அகந்தனைத் தினம் அகக்கண் காண் தெரியும்," என்று மனத்தை உள்முகமாக்குகிறார் பகவான். மனம் அந்தர் முகம் ஆகும்போது இக்கேள்விகள் எழா. கேள்விகள் எழுவது மனத்தில். அதை உள்ளே திருப்பி அதன் மூலத்தில் ஒடுக்கும்போது, எல்லாம் தெளிவாகும். உதித்த இடத்தில் ஒடுங்கி இருத்தலே ஒழிவில் ஒடுக்கம். அதுவே நாம் செய்ய வேண்டிய சாதனை என்பது ரமண உபதேசம்.

✿ ✿ ✿

கௌரி தவமிருந்த இடம் எது?

ஒருநாள் பகவான் முன்னிலையில் தேசாய் என்பவர் அருணாசல மாகாத்மியத்தைப் படித்துக் கொண்டிருந்தார். அப்போது ஓர் அன்பர் கேட்டார், "சுவாமி ! இந்த அருணாசல மலைக்கு எட்டு முகங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறதே. அது உண்மையா?"

அதற்குப் பகவான், "புராணங்கள் அஷ்டவசுக்களைப் பற்றிக் கூறுகின்றன. இவர்கள் பிரம்மாவிற்கு முன் தற்பெருமை பேசவே, தங்கள் சக்தியை இழந்து அருணாசலம் வந்து தவம் இயற்றினர். அஷ்டவசுக்களுக்கும் சிவபெருமான் ஒரே சமயத்தில் இந்த மலையின் எட்டு இடங்களில் தரிசனம் தந்தார். இந்த எட்டு வசுக்களும் அருணகிரியில் எட்டு குன்றுகளாக இன்றும் இருப்பதாகக் கருதப்படுகிறது. இவர்கள் மலையில் தங்கித் தவம் செய்து கொண்டிருக்கிறார்களா அல்லது மலையில் குன்றுகளாக இருக்கிறார்களா என்பது தெரியவில்லை."

"அஷ்ட திக்பாலர்களும் காவல் நின்றது அஷ்டலிங்கம் உள்ள இடங்களில் தானா அல்லது அவர்கள் வழிபட்டது இந்த எட்டு லிங்கங் களையா என்பது தெரியவில்லை."

"கௌரி சிவனைக் குறித்துத் தவம் செய்த இடம் எது என்று நிச்சயிப்பதும் கஷ்டம்தான். இருந்தாலும் கௌரி தவம் செய்த இடம் தற்போதுள்ள பவளக்குன்று, துர்க்கை அம்மன் கோயில், பச்சையம்மன் கோயில் - ஆகியவை சூழ்ந்த பகுதியாக இருக்கக் கூடும். கௌதம ஆசிரமமும் இங்குதான் இருந்திருக்க வேண்டும்," என்று கூறிமுடித்தார்.

✿ ✿ ✿

மருந்தில்லாத வைத்தியம்

பகவானுக்கு முழங்கால்களில் வீக்கம், வலி - வாத நோய். பணி யாளர்கள் அவரது முழங்கால்களில் தைலத்தைத் தேய்த்து, கால்வலி யைப் போக்கப் பலவாறு முயன்றனர்.

ஒரு நாள் பகவானது கால்களுக்கு அவர்கள் தைலம் தேய்த்துக் கொண்டிருந்தபோது வேடிக்கையாகப் பகவான், "உங்கள் வீட்டிற்கு விருந்தாளி ஒருவர் வருகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் அவரை அலட்சியம் செய்து சரிவர கவனிக்கவில்லையானால், அவர் கூடிய சீக்கிரம் உங்கள் வீட்டிலிருந்து புறப்பட்டு விடுவார் அல்லவா? ஆனால் நீங்கள் அவருக்கு அதிகமாக மரியாதை காட்டி, அவர் தேவைகளைப் பூர்த்தி செய்து உபசாரம் செய்தால், அவர் உங்கள் வீட்டை விட்டுப் போகவே மாட்டார்."

"இதைப் போலவே வியாதியும். நீங்கள் இப்போது என் கால் வலியைப் போக்குவதற்கு இப்படியெல்லாம் முயற்சி செய்து, அதைக் கவனித்தால், அது என்னை விட்டு எவ்வாறு போகும்? இந்த வியாதிக்கு நீங்கள் எந்த மருந்தும் கொடுக்காமல் அதைக் கவனிக்காது விட்டு விட்டால் அது தானாகவே போய்விடும்," என்றார்.

இது பகவானது மருந்தில்லாத வைத்தியம் ! எவ்வித வைத்தியத் தையும் பகவான் விரும்பி ஏற்பதில்லை. தமது உடலைத் தம் அடியாரிடம் ஒப்படைத்து விட்டார்.

அவருக்கு ஏது உடலைப் பற்றிய எண்ணம்? அவர்தான் 'உபாதிரஹிதன்' ஆயிற்றே.

✿ ✿ ✿

நினைப்பின் சுழலில்

- பகவான்

ஒருவன் அறிவில் ஏற்படும் போலி அகந்தைதான் நினைப்புக்குக் காரணம். நினைப்பிலிருந்து விடுபட்டால் அமைதி கிட்டும். வெறும் அறிவாகவே இருந்தால், இப்படி அமைதி இருந்தால், எல்லா இடத்திலேயும் அமைதியே இருக்கும்.

சரியும் தவறும்

எது சரி? எது தவறு? எந்த நியாயத்தை வைத்து இது சரி, அது தப்புன்னு சொல்வது? நியாயம் என்பது இடத்துக்கு இடம், ஆளுக்கு ஆள் மாறுபடும். மேலும் இது எல்லாம் கற்பனை. அதைப் பற்றிக் கவலைப்படக்கூடாது. நினைப்புகளில் மாட்டிக்காதீர்கள். அப்படி இருந்தா சரியாகவே வழி நடத்தப்படுவோம்.

நமது தப்பைப் பிறரிடம் பார்க்கிறோம். நல்லது, கெட்டது என்று பிரிப்பது வினைக்கு ஆரம்பம். ஒவ்வொருவனும் அவனது பூர்வ வினையைத்தான் வெளியே உலகமாகப் பார்க்கிறான். அறியாமையே அவன் தப்பு....இவன் தப்புன்னு..... பிறர் மேலே அதை ஏத்திக்கிறோம். இந்த சரி-தப்புன்னு பார்க்காத நிலையிலேயே பேசாமல் இருந்துடணும். அதுதான் இதுக்குத் தீர்வு.

தூங்கும்போது சரி ! தப்புன்னு பார்க்கிறீர்களா? தூக்கத்தில் நீங்க இல்லையா? அதே மாதிரி இப்பவும் இருக்கணும். ஆத்மாவாக இருங்கோ ! உங்களைச் சுற்றி என்ன நடந்தாலும் பாதிக்கப்படாமல் இருங்கோ. நீங்கள் எவ்வளவு நல்லதை எடுத்துச் சொன்னாலும், யாரும் கேட்கப் போறது இல்லை. யாரும் திருந்தவும் மாட்டா. உங்கள் நியாயத்தில் அமைதியாக இருங்கோ ! உங்கள் அமைதி செயலை விட மிகப் பலமானது. அதுதான் மனோபலம். அப்போ உலகம் தேவலோக சாம்ராஜ்யமாக இருக்கும். அது உங்களுக்குள்ளே இருக்கு.

நினைக்கிறவனைப் பிடி

நினைப்பு ஒவ்வொன்றாக வந்து தொந்தரவு பண்ணும். ஒரே நினைப்பைப் பிடித்துக் கொண்டு, மற்றவற்றை விரட்டணும். இடைவிடாத பயிற்சி தேவையான மனோபலத்தைக் கொடுக்கும்.

நினைப்பு இல்லாமல் இருக்கிறது தியானம். அது ஒருத்தருக்கு ஒருத்தர் மாறுபடும். பக்குவமானவன் நேரே நினைக்கிறவனைப் பிடிப்பான். நினைக்கிறவன் மூலத்தில் அமுங்கிடுவான். அதாவது சுத்த அறிவிலே ஒடுங்கிடுவான்.

நேரடியாக, நினைக்கிறவனைப் பிடிக்க முடியாது போனால் ..... கடவுளைத் தியானிக்கணும். காலக்கிரமத்தில் **நினைக்கிறவனைப் பிடிச்சுக்கற பக்குவத்துக்கு** வந்துடுவான்.

✿ ✿ ✿

மதுரை ரமணகேந்திர கார்பஸ் நிதி

கார்பஸ் நிதி "ரமண கேந்திரம், மதுரை" என்ற பெயரில் D.D. மூலம் அனுப்ப வேண்டும். நன்கொடைக்கு 80G படி வரிவிலக்கு உண்டு. நிதி நல்கிய அன்பர்களுக்கு ரமணஒளி அனுப்பி வைக்கப்படும். இவர்கள் தனியாக ரமண ஒளி சந்தா அனுப்ப வேண்டியது இல்லை. மார்ச் 19 to மே 2019 வரை நன்கொடை கொடுத்தவர்கள்.

1. Sri. L.S. Tirumurugan	- Madurai	Rs.	6,000/-
2. Smt. Gowri Ammal	- Madurai	Rs.	2,000/-
3. Sri. Sivaramakrishnan	- Bangalore	Rs.	1,000/-
4. Sri. J. Jaya kumar	- Madurai	Rs.	1,500/-
5. Sri. Paramasivam	- Madurai	Rs.	1,500/-
6. Sri. R. Bala Krishnan	- Coimbatore	Rs.	1,000/-
7. Sri. T. Thirumalai Kumarasamy	- NewDelhi	Rs.	1,000/-
8. Smt. Sudha Palani	- Madurai	Rs.	20,000/-
9. Sri. KrishnaMoorthi	- Pondichery	Rs.	1,000/-
10. Sri. Eswara Rajan	- Madurai	Rs.	5,000/-
11. Sri. Kannan	- Tirupachtti	Rs.	1,000/-
12. Sri. J.M. Chandra Sekaran	- Chennai	Rs.	1,500/-

நன்கொடை

1. Sri. R. Nandhakumar	- Madurai	Rs.	2,000/-
2. Sri. K. Vinot Kumar	- Aalankulam	Rs.	1,000/-
3. Sri. S. Raju	- Anupuram	Rs.	2,000/-
4. Sri. Jothi	- Madurai	Rs.	3,000/-
5. Smt. Dival Pand	- Gujarat	Rs.	5,000/-
6. Dr. N.K. Venkataraman	- Bangalore	Rs.	2,000/-
7. Sri. R. Nanda Kumar	- Madurai	Rs.	3,000/-
8. Smt. R. Shyamala	- Chennai	Rs.	2,000/-
9. Sri. M. Jayaraj	- Madurai	Rs.	1,500/-
10. Selvi Lakshmi	- Madurai	Rs.	1,001/-
11. Sri. Ramana Electrical	- Madurai	Rs.	1,001/-
12. Sri. M. Saravanan	- Tiruchuli	Rs.	1,000/-
13. Sri. A.L. Muthu Karupan	- Dindugal	Rs.	1,000/-
14. Sri. Gobalan	- Madurai	Rs.	1,000/-
15. Smt. Santha Chandra Sekar	- Pondichery	Rs.	2,000/-
16. Sri. K. Jeevanandam	- Madurai	Rs.	1,000/-
17. Sri. A.R. RamKumar	- Madurai	Rs.	1,000/-
18. Sri. K. Rengasamy	- Madurai	Rs.	5,000/-
19. Smt. Kaliammal Chandrasekar	- Madurai	Rs.	1,000/-
20. Pon. Varadhan - Uma	- Madurai	Rs.	3,000/-
21. Sri. Rathinavel Pandiyan	- Madurai	Rs.	1,000/-
22. Sri. Ramesh Haritha	- Pune	Rs.	1,116/-
23. Sri. Sathish S. Kumar	- Bangaloru	Rs.	15,001/-

ஸ்ரீ ரமண பக்த விஜயம்

ஆர்தர் ஆஸ்போர்ன்(பாகம்-2) - Dr. வி. நிரஞ்சன்

உலகு அறிவு ஒன்றாய் உதித்து ஒடுங்குமேனும்
உலகு அறிவு தன்னால் ஒளிரும் - உலகு அறிவு
தோன்றி மறைதற்கு இடனாய்த் தோன்றி மறையாது ஒளிரும்
பூன்றமாம் அஃதே பொருளாம் ஆல்
—உள்ளது நாற்பது பாடல் – 7

வெளி வளி தீ நீர் மண் பல உயிராய்
விரிவுறு பூத பௌதிகங்கள்
வெளி ஒளி உன்னை அன்றி இன்று
—அருணாசல பதிகம் – 7

மணிகளில் சரடு என உயிர் தொறும் நா நா
மதம் தொறும் ஒருவனா மருவினை நீ தான்
—அருணாசல அஷ்டகம் – 5

God is your own Self beyond body, mind and intellect. (Crumbs from the table)

[உடலையும் மனதையும் புத்தியையும் கடந்து விளங்கும் உனது சொரூபமே கடவுள் : ஸ்ரீ ரமண உச்சிஷ்டம்]

க்டைனியாவில் ஆர்தருக்கு வழிகாட்டும் முகமாக ஃப்ரென்ச் நாட்டைச் சேர்ந்த ஆன்ம தத்துவ சிந்தனையாளர் ஒருவருடைய முக்கியமான நூல் கிடைக்கப் பெற்றது. கொடுத்தது ஆர்தரின் நண்பர் **மார்ட்டின் லிங்க்ஸ்** என்பார். அவரும் ஆர்தரைப் போல ஆக்ஸ்ஃபோர்டில் படித்து வெளிவந்தவர். **விதுவேனியாவில்** உள்ள பல்கலைக் கழகத்தில் ஆசிரியராகப் பணியாற்றுபவர். மார்ட்டின் அந்தத் தத்துவ சிந்தனை யாளரை வெகுவாகப் புகழ்ந்தார். அந்தத் தத்துவ சிந்தனையாளரின் பெயர் ரெனெ ஞான் என்பது.

மேலைச் சமயங்களையும் கீழைச் சமயங்களையும் உள்ளடக்கிய ஆக்கப்பூர்வமான ஆய்வு மேற்கொண்டவர் **ரெனெ ஞான்**. மேலை நாடு களின் பண்பாட்டுச் சீர்குலைவிற்கான காரணங்களையும் அதற்கான தீர்வுகளையும் துணிச்சலோடு தனது நூல்களில் வெளியிட்டிருந்தார். மார்ட்டின் கொடுத்த நூலைப் படித்த ஆர்தர் தனது மனதில் அதுவரை அவ்வப்போது தோன்றிக் கொண்டிருந்த சிந்தனைகள் தெளிவாக அந்நூலில் விளக்கப்பட்டிருப்பதை அறிந்து வியப்பில் ஆழ்ந்தார். வாழ்க் கையின் குறிக்கோள் பற்றியும் அதை அடையும் செயல் முறை பற்றியும் ரெனெ ஞான் தெளிவுப்படுத்தி இருப்பது கண்டு பரவசமானார்.

ரெனெ ஞான் நூல்களில் தெளிவாக விளக்கப்பட்டுள்ள கருத்துக் கோவையை சுருக்கமாகப் பார்க்கலாம். தோன்றி மறையும் காட்சிகளான இந்த உலகத்திற்குப் பின்னால் தோன்றி மறையாத பரம் பொருள் ஒன்று உள்ளது என்பது உலக சமயங்களில் வெளிப்படையாகவோ மறைமுக மாகவோ உணர்த்தப் பட்டிருக்கின்றது என்பதை அவர் ஆதாரங்களோடு

விளக்குகின்றார். சத் வஸ்து என்பது ஒன்றே. அதன் வெளிப்பாடே உலகமும் ஜீவனும். ஜீவனின் அனுபவங்களும் என்பது இதனால் தெளிவாகின்றது. தோன்றி மறைகின்ற ஜீவர்கள் அனைவரும் ஒரு சத் பொருளே. அவர்களுக்கு இடையிலே உள்ள வேறுபாடுகள் பொய்யே. அவர்கள் அனைவரும் பரம்பொருள் சொரூபமே என்பதே உண்மை. இதை உணர்ந்து ஒவ்வொரு ஜீவனும் தனது வாழ்க்கையில் பரம்பொரு ளோடு ஐக்கியப்பட முயலவேண்டும். பரம் பொருளோடு ஐக்கியப்படு கின்ற ஜீவன் உயிர்த்து மரிக்கின்ற உடல் தான் இல்லை என்றும், உடல் கடந்து, மனம் கடந்து, புத்தி கடந்து, கால தேசம் கடந்து விளங்குகின்ற இருப்பு அறிவு இன்பமே தன் உண்மை என்றும் அறிகின்றது. இவ்வறி வையே ஜீவன்முக்தி என்றும், வீடுபேறு என்றும் அறிகின்றோம். குறை யறிவாகிய ஜீவத்துவம் தோற்றமாத்திரமே. ஒவ்வொரு ஜீவனின் சொரூபமும் முற்றறிவாகிய பரம் பொருள் என்பதுவே பரமார்த்தம்.

எல்லாச் சமயங்களிலும் இந்த உண்மை சடங்குகளால் மறைக்க பட்டுள்ளது. பெரும்பாலான மக்கள் இந்த உண்மையின் உள்வாங்கும் சக்தி இல்லாதவர்களாக இருப்பதால் அவர்களிடையே மெய்ப்பொருளை நினைவுபடுத்தும் முகமாக சடங்குகளும் வழிபாடுகளும் விழாக்களுமே முன் வைக்கப்படுகின்றன. நாளடைவில் மெய்ப் பொருள் மறைந்து போய் சாரமற்ற குறியீடுகளாகிய சடங்குகள் மட்டுமே மிஞ்சிவிட்டன. ஆதலால் மக்களுக்குச் சடங்குகளின் மீது நம்பிக்கை குறைந்துவிட்டது. பெயரளவிற்கு பக்தி என்றாய் விட்டது. அதே சமயம் உலக போகங்களை மேலும் மேலும் துய்க்க வேண்டும் என்பதே குறிக்கோள் ஆகிவிட்டது. அதன் காரணமாக அன்பு, இரக்கம், தயை, பரிவு முதலிய குணங்கள் மறைந்து விட்டன. பேராசை, பகை, வன்முறை, முதலிய எதிர்மறை சக்திகள் எழுந்துவிட்டன. நல்லவர்கள் மனங்கலங்குகின்றனர். அல்லவர்கள் ஆர்ப்பரித்து எழுகின்றனர். இந்தச் சூழ்நிலையில் சமுதாயத்தில் மீண்டும் மெய்ப்பொருள் பற்றிய விளக்கத்தை வெளிப் படுத்தி மெய்ப்பொருளோடு ஐக்கியப்பட்டு வாழ்வதன் மகத்துவத்தை பக்குவர்களுக்கு உணர்த்துவதே ரெனெ ஞானின் வெளியிடுகளின் உட்கிடக்கை. இதன் வாயிலாக புறமுகப்பட்டு ஓடும் மனதை அகமுகப் படுத்தி பூரண இருப்பு அறிவு இன்பமே ஜீவனது சொரூபம் என திடம் உறச்செய்வதே ரெனெ ஞானின் நோக்கம் ஆகியிருந்தது.

மெய்ப்பொருள் ஆர்வலர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்று ரெனெ ஞான் பரிந்துரைக்கின்றார். மெய்ஞானம் அடைந்த குருக்களின் பாரம்பரியம் இந்தியாவில் வேதகாலம் தொட்டு இருந்து வருவதாகக் குறிப்பிடும் அவர் ஞான ஆசான் இந்தியாவில் கிடைக்கப் பெறலாம் என்கின்றார். இஸ்லாமிலும் ஞான ஆசான்கள் இருக்கின்றனர் என்றும் அவர் கூறுகின்றார். அவரே பாரீஸை விட்டு விட்டு கெய்ரோ விற்குச் (எகிப்து) சென்று இஸ்லாமிய ஞான ஆசான் ஒருவரிடம் முறைப்படி தீக்ஷை பெற்று மெய்ப்பொருளோடு ஐக்கியப்படுகின்ற சாதனையில் புகுவிக்கப்படுகின்றார். மேல் எழுந்த வாரியாக சமயங்கள்

ஒன்றுக்கொன்று வேறுபட்டாலும் சொரூபஞானசித்தி என்பது பொதுவே என்பது அவரது துணிபு.

தோன்றும் சகலத்திற்கும் அதிட்டான சத்தியம் ஒரு மெய்யே என்பது ஆர்தருக்கு இளம் வயதிலிருந்தே உறுதிபடத் தெரிந்தது. இப்போது அந்த அதிட்டான சத்தியத்திற்கும் ஜீவனான தனக்கும் ஏற்பட வேண்டிய ஐக்கியமே வாழ்வின் குறிக்கோள் என்பதை ஐயம் திரிபு இன்றி ரெனெ ஞானின் நூல்களில் இருந்து தெரிந்துகொண்டார். இனிச் செய்ய வேண்டியது சற்குரு ஒருவரை நாடி அவர் மூலமாக பரஜீவ ஐக்கியத்திற்கான சாதனையில் புகுவிக்கப் படவேண்டியதே என்றும் அறிந்து கொண்டார். சத் குருவானவர் குருபாரம்பரியத்தில் வருகின்றவராகவும் தானே ஆன்ம ஞானியாகவும் இருக்க வேண்டும். அதுவே சிறப்புடையது என்று ரெனெ ஞான் வலியுறுத்துகின்றார். மேலை நாடுகளில் இத்தகைய பெரியோர் இருப்பினும் அவர்கள் பரவலாய் மக்களுக்குப் புலப்படாதே இருந்தனர்.

இச்சமயத்தில் தான் ஆர்தருக்கு தென்கிழக்கு நாடான சியாமில் உள்ள பல்கலைக் கழகத்தில் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பு கிடைக்கின்றது. ஆதலால் ஆர்தர் குடும்பத்துடன் 1937-ஆம் ஆண்டு பேங்காக் செல்கின்றார். மார்ட்டினுடனும் ரெனெ ஞானுடனும் ஆர்தர் தொடர்பு வைத்துக் கொள்கின்றார். ரெனெ ஞானின் ஒரு நூலை அவர் ஆங்கிலத்தில் ஆக்கம் செய்கின்றார்.

ரெனெ ஞானின் நூல்களால் ஈர்க்கப்பட்டவர்கள் ஒரு குழுவாகச் செயல்பட ஆரம்பித்தனர். அவர்கள் தகமை வாய்ந்த குரு ஒருவரைத் தேட ஆரம்பித்தனர். அப்போது இந்தியாவில் இஸ்லாமிய குரு ஒருவர் இருப்பதாக ஆர்தருக்குத் தெரிவிக்கப்பட்டது. அவரிடம் ஆர்தர் தீக்ஷை பெறுகின்றார். ஆனால் அவரது மனம் முழுமையாய் ஈடுபடவில்லை. இதற்கு இடையில் மார்ட்டினின் தீக்ஷா குரு ஆர்தரின் குருவைப் பற்றி ஐயப்பாடு உள்ளவராய் இருந்தனர். ஆர்தரோ அந்த குரு வழிகாட்டிய பயிற்சியைச் செய்து கொண்டு வந்தார்.

அச்சமயம் அந்தக் குழுவைச் சேர்ந்த சிலர் பகவான் ரமணரது சன்னிதிக்குவந்துசேர்ந்துஅவரதுமாட்சிமையைஅறிகின்றனர்.ஆன்மகுரு அவரே என்று துணிபு கொள்கின்றனர். ஆனால் அவர்களுக்கு இருந்த தயக்கம் பகவான் எந்த ஒரு குருபாரம்பரியத்தையும் சேர்ந்தவர் இல்லை என்பதோடு இல்லாமல் பகவான் தன்னை குரு என்றோ தன்னை அடைந்தவர்களை சீடர்கள் என்றோ கூறுவதும் இல்லை. யாருக்கும் தீக்ஷை அளிப்பதும் இல்லை என்று மேல் எழுந்த வாரியாகப் புரிந்து கொண்டனர். ஆதலால் பகவானை குருவாக ஏற்றுகொள்ளுவது சாத்தியம் இல்லை என்று அவர்களாகவே முடிவு கட்டினர். ஆதலால் பகவானின் சன்னிதியில் தங்கள் தேடலை பூர்த்தி பண்ணிக்கொள்ளாமல்பகவானைவிட்டுவிலகினர்.

இது குறித்து தங்களது கருத்தை ரெனெ ஞானுக்கும் தெரிவித்து விட்டனர். ரெனெ ஞானும் பகவானைப் பற்றிச் சரியான செய்திகள் கிட்டாத சூழலில் தான் முன்னரே கொண்டிருந்த கருத்துக்கு ஏற்ப பகவானைக் குரு எனக் கொள்ளுதல் இயலாதது என்றே கருதிவிட்டார். அவரும் அவரது குழுவினரும் கருத்துக்களை மாற்றிக் கொள்ளும் காலம் சில ஆண்டுகளுக்குள் வரப் போவதை அவர்கள் அறிந்திருக்க வில்லை. அதற்கு மூல காரணமாக இருக்கப் போகின்ற ஆர்தரும் அந்தச் சமயத்தில் அப்படிப்பட்ட மாற்றம் ஏற்படப்போவதை உணராமல் இருந்தார்.

இயல்பாக அவரது சியாம் பல்கலைக்கழகப் பணி தொடர்ந்தது. அதோடு அவருடைய சூஃபி குருவின் பயிற்சிகளும் தொடர்கின்றன. அவரது பல்கலைக்கழகப் பணி புதுப்பிக்கப்பட்டு அவர் பணியைத் தொடர்வதற்கு முன் அவருக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. 1941-1942 ஒட்டிய காலம் ஐரோப்பாவில் இரண்டாம் உலகப் போரின் துவக்க காலம். ஆர்தர் ஐரோப்பாவிற்குக் குடும்பத்துடன் செல்வது பாதுகாப்பற்றது என்று உணர்ந்தார். ஆதலால் அவரும் மனைவியும் மூன்று குழந்தை களும் பிரிவு படாத இந்தியாவிற்கு விடுமுறைப் பயணமாக வருகின்றனர்.

இதற்கு சற்று முந்திய காலத்தில் பகவானது திருவுருவப்படம் ஆர்தருக்கு கிடைக்கப்பெறுகின்றது. பகவானது திருவுருவத்தைக் கண்ட அக்கணமே லூசியா ஆஸ்போர்ன் அவர் மீது ஆழமான விசுவாசம் கொண்டார். லூசியாவிற்கு பகவானின் மேல் ஒரு பிடிப்பு இருந்தது. அக்காலத்தில் பகவானது உருவத்தை சிலை வடிவில் ஆக்கும் ஆர்வம் உடையவரானார். நீண்ட காலம் உழைக்கவும் செய்தார்.

விடுமுறை முடியும் தருவாயில் கிழக்கே ஜப்பான் விரிவாக்கப் போரில் நுழைத்திருந்தது. எந்த நேரத்திலும் சியாமைக் கைப்பற்றி அதைத் தனது ஆதிக்கத்தின் கீழ் அது கொண்டுவந்து விடும் அச்சம் நிலவியது. சியாம் அப்பொழுது பெயர் மாறி தாய்லாந்து என அழைக்கப் பட்டது. ஆங்கிலேய அரசு தாய்லாந்தில் பணிபுரியும் ஆங்கிலேயர் களைப் பணிக்குத் திரும்பும் படி கூறியது. அந்தச் சூழலில் ஆர்தருக்குத் தான் மட்டும் தாய்லாந்து திரும்புவது நல்லது என்றே தோன்றியது. பழகிய இடம் அங்கே இருந்து ஆன்மிகப் பயிற்சியையும் செய்து வரலாம் என்று நம்பினார். லூசியாவையும் குழந்தைகளையும் பாதுகாப்பாக விட்டுச் செல்வதற்கான ஓர் இடம் அவருக்குத் தேவைப்பட்டது.

லூசியாவின் நண்பர் மெக்கிவர் ரமண சன்னிதியில் இருந்து வந்தார். அவர் தங்குவதற்காக திருவண்ணாமலையில் ஒரு வீடு வைத்துக் கொண்டிருந்தார். அவர் லூசியா குழந்தைகளுடன் அவரது வீட்டில் தங்கிக் கொள்ளலாம் என்று லூசியாவிற்கு அழைப்பு விடுத்தார். குழந்தைகளுடன் ரமண சன்னிதிக்கு அருகில் தங்குகின்ற வாய்ப்பு லூசியாவிற்கு எளிதில் கிட்டியது. இதுவும் பகவானின் திருவருளே

என்றுதான் நினைக்கத் தோன்றுகின்றது. ஆர்தரும், லூசியாவும் அவர்களது குழந்தைகளும் பகவானது அருளைப் பூரணமாகப் பெறுவதற்குரிய அனைத்து ஏற்பாடுகளும் செய்து முடித்தது போலாயிற்று. ஆர்தர் தாய்லாந்திற்கும் லூசியாவும் குழந்தைகளும் லாகூரிலிருந்து (பாகிஸ்தான்) திருவண்ணாமலைக்கும் பயணமாயினர்.

ஆஸ்போன் தாய்லாந்து திரும்பிய சில நாட்களுக்குள் ஜப்பான் தாய்லாந்தைக் கைப்பற்றியது. ஆஸ்போனோடு கூடிய ஆங்கிலேயர்களும் ஐரோப்பியர்களும் வேறு ஒரு பல்கலைக் கழக வளாகத்தில் காவலில் வைக்கப்பட்டனர். காலப் போக்கில் வெளி உலகத்துடன் செய்தித் தொடர்பு முழுதும் துண்டிக்கப்பட்டுவிட்டது. இப்படி ஏறத்தாழ நான்கு வருடங்கள் ஆர்தர் அவரது குடும்பத்திடம் இருந்து பிரிக்கப்பட்டார். ஆரம்ப காலத்தில் செய்தித் தொடர்பு இருந்து கொண்டிருந்த பொழுது லூசியா ஆர்தருக்கு எழுதிய கடிதத்தில் அவர்கள் திருவண்ணாமலை அடைந்த சில நாட்களில் ஆடமும், கேதரினும் (ஆஸ்போர்னின் குழந்தைகள்) பகவானிடம் சென்று தங்களது தந்தையைப் பாதுகாத்து தங்களிடம் சேர்த்துவிடும்படி வேண்டிக் கொள்கின்றனர் என்றும் பகவான் மெல்லிய புன்னகையால் அவர்களுக்கு அபயம் அளித்தார் என்றும் எழுதுகின்றார்.

அந்நிகழ்ச்சியை அறிந்ததிலிருந்து ஆஸ்போன் தனது மனது பகவானின் அருள் பாலிப்பை உறுதிசெய்துகொண்டது என்றும் அதன் பின்னர் அவர் அந்த நான்கு ஆண்டுகளிலும் எவ்வித மனக் கலக்கமும் அடையவில்லை என்றும் கூறுகின்றார். அந்தக் கடிதத்தில் கேதரின் பகவானைப் பற்றி, "**அப்பா, நீங்கள் பகவானை நிச்சயம் நேசிப்பீர்கள். அவர் புன்னகைக்கும் பொழுது ஒவ்வொருவரும் அவ்வளவு ஆனந்தமாக இருப்பார்கள் என்பது திண்ணம்,**" என்று எழுதியிருந்தது தன்னை மிகவும் நெகிழ வைத்த வார்த்தைகள் என்று ஆர்தர் குறிப்பிடுகின்றார்.

திருவண்ணாமலையில் கேதரின் ஆஸ்போன் ஒரு தட்டில் பழங்களை வைத்து எடுத்துக்கொண்டு போய் தயங்கியவாறு பகவானின் சன்னிதியில் நிற்கின்றாள். யாரோ ஒருவர் பகவானது சன்னிதி முன்பு வைத்திருந்த ஸ்டூல் ஒன்றை அவளுக்குச் சுட்டிக் காண்பிக்கின்றனர். பகவானுக்கு அர்ப்பணிக்கும் பொருள்கள் அந்த ஸ்டூலில் வைக்கப்படுவது வழக்கம். கேதரினோ பழங்கள் வைத்திருந்த தட்டோடு அந்த ஸ்டூலில் அமர்கின்றாள். "**அவள் தன்னையே பகவானுக்கு அர்ப்பணித்துக் கொண்டுவிட்டாள்**" என்று யாரோ ஒருவர் கூறுகின்றார். ஆடம் ஆஸ்போனும், கேதரினும் பகவானின் அருளுக்கும் அன்பிற்கும் பாத்திரப்பட்ட குழந்தைகளாயினர். ஆஸ்போன் தம்பதியரின் மூன்றாவது குழந்தை ஃப்ரேனியா. அவள் பகவானின் சிறப்பான கனிவிற்குப் பாத்திரம் ஆனாள். ஒரு சமயம் பகவான் ஃப்ரேனியாவை தன் மீது சாத்தியவாறு நடந்திருக்கின்றார் என்று ஆஸ்போன் நெகிழ்ந்து குறிப்பிடுகின்றார்.

ஆஸ்போன் குழந்தைகள் தங்களது தந்தையின் பாதுகாப்பை பகவானிடம் விட்டுவிட்டனர். பகவானை நேரில் கண்ட தருணத் திலேயே லூசியா தங்களுக்குப் புகலிடமும் சத்குருவும் பகவானே என உறுதி அடைந்தார். பகவானின் கண்ணோக்கத்தில் அவரது மனம் எளிதில் சலனமற்று அகமுகப்பட்டு அடங்கியது. ரெனே ஞானின் புத்தகத்தைப் படித்துவிட்டு ஆஸ்போன் அடைந்த பரவச நிலையை பகவானது சன்னிதியில் லூசியா எளிதில் அடையலானார். அவரது மனதில் பகவானின் மீது பேரன்பு கொண்டார். பகவான் பரிந்துரைக்கும் ஆன்ம விசாரமே கடைப்பிடிக்கவேண்டிய பயிற்சி என்று அறிந்து கொண்டார். பகவானிடம் எல்லாவற்றையும் சமர்ப்பணம் செய்து விட்டு மனம் உள்முகப்பட்டு இருத்தல் மட்டுமே செய்யவேண்டியது எனத் திடமானார். பொருளாதாரத் தேவை இருந்தும் கிடைத்த வேலையை நிராகரித்து விட்டு பகவானின் சன்னிதியில் விசாரத்தில் ஆழ்ந்து கிடப்பதே கிடைத்தற்கு அரிய வாய்ப்பை நன்கு பயன்படுத்துவதாகும் என்ற உறுதியோடு பகவானை விட்டு அகலாது இருந்தார்.

ஒரு முறை பகவான் லூசியாவின் புறம் திரும்பி அவரைப் பார்த்த வாரே இருந்தார். சற்று நேரத்தில் லூசியாவின் மனம் அடங்கிவிட்டது; அவர் உள்முகமானார். நெடுநேரம் அசைவற்று நிட்டை உற்றிருந்தார். பின்னர் அவர் உணர்வு புறமுகப்பட்டு விழித்த பொழுது ஒருவர் வந்து என்ன நடந்தது என்பதை விளக்குகின்றார். பகவான் லூசியாவிற்கு பார்வையால் தீக்ஷை அளித்துவிட்டனர். அதனால் உள்முகப்பட்டு நிட்டை உற்றிருந்த லூசியாவையே நீண்ட நேரம் பகவான் பார்த்த வண்ணம் இருந்தனர். இது தான் வார்த்தைகளே வெளிவராத மோன சன்னிதியின் தீக்ஷை என்று அவருக்குத் தெரிவிக்கப்பட்டு விட்டது. குருவருளால் ஒரு முறை ஒடுங்கிய உள்ளத்தை நிரந்தர அப்பியாசத் தால் அகத்தே ஒடுக்கி சகஜ சமாதியில் நிலைத்திருப்பதே தான் இனிச் செய்யவேண்டியது என்பதை லூசியா அறிந்து கொண்டார். பகவானின் சன்னிதியில் நிகழும் குரு அனுக்கிரகத்தின் மேன்மையை உணர்கின்றார்.

நீண்ட காலம் ஆஸ்போனிடம் இருந்து தொடர்பு துண்டிக்கப் பட்டு இருந்தது. ஆனாலும் பகவானின் அருள் ஆஸ்போனைக் காத்து தங்களிடம் கொண்டு சேர்த்துவிடும் என்பதில் லூசியா உறுதியாய் இருந்தார். கவலைக்குரிய செய்திகளைக் கேட்ட பொழுதிலும் அவர் ஒரு போதும் மனம் தளரவில்லை. பகவானின் மீது அவர் கொண்டிருந்த விசுவாசம் அளவு கடந்ததாய் இருந்தது.

(தொடரும்)

நாராயண குரு

- Dr. எ. கொண்டல்ராஜ்

பகவான் கந்தாச்ரமத்தில் இருந்தபோது பலர் வந்து அவரை தரிசித்தனர். அவர்களில் முக்கியமானவர் கேரளாவைச் சார்ந்த நாராயண குரு அவர்கள். மிகச்சிறந்த ஆன்மிகவாதியாகவும் சமூக சீர்திருத்தவாதியாகவும் விளங்கியவர். அவரைக் காண நாடெங்கும் இருந்து வந்து பலரும் தரிசித்துச் சென்றனர். மகாத்மா காந்தி மற்றும் ரவீந்திரநாத் தாகூர் கூட ஒரு முறை வந்து இவரது தரிசனம் பெற்றனர்.

அப்படிப்பட்ட நாராயண குரு பகவானை வந்து தரிசித்தது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாம்.

நாராயண குரு 1855-இல் திருவனந்தபுரத்திற்கு அருகில் உள்ள செம்பழந்தி கிராமத்தில் ஈழவர் குலத்தில் பிறந்தார். அவரு டைய தந்தை ஒரு குறு விவசாயியாக இருப்பினும் சமஸ்கிருத அறிவு பெற்றவர். புராண இதிகாசங்களை உணர்ந்தவர்.

கிராமத்தினருக்கு ஓய்வு வேளையில் புராணக் கதைகளைச் சொல்லுவார். சிறுவனாக இருந்த நாராயணன் அதனை எல்லாம் கவனமாகக் கேட்டு மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லுவார்.

அவருடைய மாமா மூலம் ஆயுர்வேதம், சமஸ்கிருதம் போன்ற வற்றைப் பயின்றார்.

15-ஆம் வயதில் அவருடைய அபாரமான அறிவுத் திறனைக் கண்டு 50மைல் தொலைவில் உள்ள கும்மம்பள்ளி என்ற இடத்தில் உள்ள ராமன் பிள்ளை ஆசானிடம் அனுப்பி வைத்தனர். அவரிடம் மிகக் குறுகிய காலத்திலேயே வேதம், உபநிஷத்களை அறிந்து கொண்டார். அதனால் அனைவரும் அவரை நாணு ஆசான் என்று அழைத்தனர்.

பிறகு தமது சொந்த ஊர் திரும்பி பள்ளிக் கூடம் ஒன்றை நிறுவினார். கிராமக் கோவில்களில் தொண்டு ஆற்றினார். துறவிபோல வாழ்ந்த அவருக்கு வலுக்கட்டாயமாகத் திருமணம் செய்து வைத்தனர். ஆயினும் இல்லற வாழ்வில் ஈடுபடாது தனியே வாழ்ந்து வந்தார்.

தமது 23-ஆவது வயதில் அவரது மனைவியார் இறந்து போன வுடன் துறவறம் பூண்டார். தியானம், யோகம் பற்றிப் பல நூல்களை எழுதினார். இதனால் அவரது புகழ் பரவத் தொடங்கியது.

1888-இல் அருவிபுரம் எனுமிடத்தில் சிவஆலயம் ஒன்றினை அமைத்தார். இந்தக் காலக் கட்டத்தில் சாதி வேற்றுமை தலைதூக்கி யிருந்தது. உயர்சாதிமக்கள் மட்டுமே கோவில் உள்ளே செல்லமுடியும் என்ற நிலை இருந்தது.

நம்பூதிரி, நாயர் போன்ற உயர்வகுப்பினரின் எச்சரிக்கையினை யும் மீறி அனைத்து வகுப்பினரையும் ஆலயப் பிரவேசம் செய்து வைத்தார். சமூகத்தில் பல வேறு சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து அடித்தள மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தார்.

வர்க்கலையில் பெரிய சமஸ்கிருத பள்ளியைத் தொடங்கி அனைத்து வகுப்பினரும் கற்க வழி வகுத்தார். அவருடைய இலக்கு தீண்டாமை ஒழிப்பாக இருந்தது. 'அனைத்தும் ஒன்றே' என்பது அவர்தம் தத்துவக் கொள்கையின் சாராம்சம் ஆகும்.

பாரதி இவருடைய சமூக நீதிக் கொள்கையினைப் பெரிதும் பாராட்டினார். இரண்டாம் புத்தர் என வருணிக்கப்பட்ட இவர் 1928-ல் செப்டம்பர் 20-ஆம் நாள் மகாசமாதி ஆனார். இவருடைய தேகம் மறைந்தாலும் மலைநாட்டில் இவரை தெய்வமாகவே போற்றி நிற்கின்றனர்.

✿ ✿ ✿

நினைவஞ்சலி

திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாச்ரமத்தின் நிர்வாகஸ்தர் திரு. V.S. மணி அவர்களின் மனைவியார் திருமதி. **ரமணி** *அவர்கள் 13.5.2019 திங்கட்கிழமை அன்று பகவான் திருவடியை அடைந்தார். அவரது பிரிவால் வாடும் குடும்பத்தார்களுக்கு பகவான் அமைதியினையும் ஆறுதலையும் அருளப் பிரார்த்திக்கின்றோம்.*

மதுரை ரமணகேந்திரத்தின் கிராமப்புற கல்வி மேம்பாட்டு உதவி வகையில் மாணவ, மாணவியருக்கான சேவை

திருச்சுழி சேதுபதி அரசு மேனிலைப் பள்ளிக்கு ரமண கேந்திரம், வழக்கம் போல் இவ்வருடமும் **ஜூலை 10 திங்கட்கிழமை** நடந்த விழாவில் 2019–ஆம் ஆண்டு நடைபெற்ற +2 மற்றும் 10–ஆம் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியருக்கு கீழே கண்டவாறு ஊக்கப்பரிசு வழங்கப்பட்டது.

10th மற்றும் +2 தேர்வில் இப்பள்ளி 99% தேர்ச்சி

+2 மாணவ, மாணவியர் விபரம்

		மதிப்பெண்	தொகை
Ist Rank	க. சிவா	505/600	- ரூ. 4,000
IInd Rank	ம. ராஜலட்சுமி	484/600	- ரூ. 3,500
IIIrd Rank	சு. சண்முகப்பிரியா	454/600	- ரூ. 3,000

400 மதிப்பெண்களுக்கு மேல் பெற்ற 16 பேருக்கு தலா ரூ.1000 வீதம் வழங்கப்பட்டது.

10ஆம் வகுப்பு

Ist Rank	அ. திலீபன்	444/500	- ரூ. 3,000
IInd Rank	ந. ஆனந்தகுமார்	427/500	- ரூ. 2,500
IIIrd Rank	ஜெ. பாலகணேஷ்பிரபு	423/500	- ரூ. 2,000

400 மதிப்பெண்களுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு தலா ரூ.500 வீதம் வழங்கப்பட்டது. மொத்த பரிசுதொகை ரூ. 38,500/-

நடைபெற்ற விழாவில் பாளையங்கோட்டை ஜெயேந்திரர் பள்ளித் தாளாளர் திரு. **ஜெயேந்திரன்** அவர்கள் பகவான் படம் போட்டு வழங்கிய 1000 Full Size ஒருகுயர் நோட்டுகள், கேந்திரம் மூலம் 1000 நோட்டுகளும் (மொத்தம் ரூ. 60,000/– மதிப்பு) மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

மேற்படி விழாவில் ரமண கேந்திரத்தின் உதவி தலைவர் **K. ரெங்கசாமி,** செயலர் **Dr. E. கொண்டல்ராஜ்,** நிர்வாகக்குழு உறுப்பினர்கள் **Dr. கலாராணி ரெங்கசாமி, சங்கர், மோகன்** மற்றும் திருச்சுழி ரமண வழிப்பாட்டு மன்றம் திருமதி. **மஞ்சுளா சுப்பிரமணியம்** கலந்து கொண்டு பரிசுகள்வழங்கினர்.

10, +2 தேர்வில் 99% தேர்ச்சிப் பெற காரணமாக இருந்த தலைமை ஆசிரியர் **பாத்திமா பேகம்,** மற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் கிராமப்புற பள்ளியாய் இருந்தாலும் தங்களது தன்னலமற்ற கடின உழைப்பால் தேர்ச்சி பெறச்செய்த அனைவருக்கும் மதுரை ரமண கேந்திரம், திருச்சுழி பொது மக்களாலும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

✿ ✿ ✿

Registered with the Registrar of Newspaper for India RNI No.TNTAM/2017/74907
Periodical Quarterly Tamil Magazine

பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகளின் ஞானோதய விழா - 2019

24ஆவது ஆன்மிகப் பயிற்சி முகாம்

நாள் : **17 & 18.7.2019 – புதன் & வியாழன்**

இடம் : **ஸ்ரீ ரமண மந்திரம்**

நேரம் : காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை

நிகழ்த்துவோர் : **Dr. சாரதா நடராஜன்** தலைவர் RMCL பெங்களூர்

விளக்கவுரை : **Dr.T.N.P. ஹரன், Dr. நிரஞ்சன்**
Dr. கலாராணி ரெங்கசாமி, திரு. **நந்தகுமார்**

இப்பயிற்சி முகாமில் கலந்து கொள்வோர் ஜூலை 10ம் தேதிக்குள் தபால் கார்டு மூலம் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

கலை நிகழ்ச்சி (நாட்டிய நாடகம்)

நாள் : **21.7.2019 – ஞாயிறு மாலை 5.30 to 8.30**

இடம் : **லட்சுமி சுந்தரம் ஹால்** (opp. தமுக்கம்)
கோகலே ரோடு, தல்லாகுளம், மதுரை.

பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகளின்

பால & ஞான காண்டம்

(ரமணரின் திருச்சுழி – மதுரை வாழ்க்கை மற்றும்
பல முக்கிய நிகழ்வுகள்)

அற்புதமான திரைக்காட்சி பின்னணியுடன் 30 கலைஞர்கள் (சிறுவர்–சிறுமியர் உட்பட) கலந்து கொள்ளும் ஒரு அற்புத கலை நிகழ்ச்சி

அனுமதி இலவசம் ! **அனைவரும் வருக !!**

Printed by T.M. Durga, Published by Dr. E. Kondal Raj, on behalf of Ramana Kendram, and Printed at : Vignesh Graphics, 79-A, South Marret Street, Madurai-1.
Published at Ramana Kendram, No. 21/11, Chokkappa Naicker Street, Madurai-1
Editor : Dr. T.N. Pranadharthi Haran